


ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டு உள்ளதற்கு எதிராகவும் நூறு நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியை தடுத்து வரும் ஒன்றிய பாஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க. வையும் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் கும்பகோணம் மாநகரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநகரச் செயலாளர் சு.ப. தமிழழகன், பகுதி செயலாளர்கள் உள்ளிட்ட தோழமை கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், தோழமை கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதற்கு எதிராகவும் தொடர்ந்து தமிழக மக்களை வஞ்சிக்கும் பாசிச பா.ஜ.க அரசை கண்டித்தும் அதற்கு ஒத்து ஊதும் அதி.மு.க.வையும் கண்டித்து தஞ்சையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, சண்.இராமநாதன், சி.இறைவன், எல்.ஜி. அண்ணா, கனகவள்ளி பாலாஜி, ச.ஜித்து, தோழமைக் கட்சி நிர்வாகிகள் மகேந்திரன், அமர்சிங், துரை.சிங்கம், செந்தில், சரவணன், சொக்கா ரவி, உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## நகரக் கூட்டுறவு வங்கிகளை புதுப்பிக்கும் திட்டத்தில்
# இந்திய ரிசர்வ் வங்கியின் பங்களிப்பு அதிகரித்துள்ளதா?
## மாநிலங்களவையில் – எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, பிப்.14-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ்.ஆர்.சிவலிங்கம் 10 பிப்ரவரி 2026 அன்று மாநிலங்களவையில், நகரக் கூட்டுறவு வங்கிகளை புதுப்பிக்கும் திட்டத்தில், இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதிகள் அதிகரித்துள்ளதா? என்றும், வங்கிகளின் மேலாண்மை, ஒழுங்குமுறை வழிகாட்டுதல்கள் அனைத்து தரப்பினருக்குமான வளர்ச்சி ஆகியவற்றை பாதுகாக்கும் இந்திய ரிசர்வ் வங்கி கவனம் செலுத்துமா? என்றும், புதிய அனுமதிகள் வழங்க ஒன்றிய அரசு வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளதா? என்றும், அதன் விவரங்களை மேலவை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரியிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

கடந்த ஜனவரி 2026 முதல் நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதி வழங்கும் வகையில், இந்திய ரிசர்வ் வங்கி பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளது என்றும், குறைந்த பட்சம் முதலீடாக ரூபாய் 300 கோடிகள் அளவிற்கு உள்ள நகர கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றும் பல்வேறுப்பட்ட பயனாளிகளை கொண்டு அந்த வங்கிகள் இயங்கும் என்றும், நகர்ப் பகுதிகளின் வளர்ச்சிக்கும் அனைவரையும் உள்ளடக்கியதாக கூட்டுறவு வங்கிகள் செயல்பட வேண்டும் எனவும் இணையமைச்சர் தெரிவித்தார்.

நகரக் கூட்டுறவு வங்கியின் பங்குப் பத்திரங்கள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின் குறைந்த பட்ச இருப்புக் காலம் பத்து ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், முதலீட்டாளர்கள் நலனைப் பாதுகாக்க, ஒழுங்காற்று விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன என்றும், புவியியல் ரீதியாக நகரப் பகுதிகளில் வசிப்பவர்கள் மட்டுமே பங்குதாரர்களாக சேர்க்கப்படுவர் என்றும், இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை, நான்காம் நிலை நகர கூட்டுறவு வங்கிகளுக்கு முதலீட்டு விகிதம் 12 சதவீதமாக உயர்த்துப்பட்டுள்ளது என்றும், முதல் நிலையிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளுக்கு கையிருப்பு முதலீட்டு விகிதம் 55 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் மூலம், வங்கித் துறையின் வளர்ச்சி கூட்டுறவுத்துறையில் அதிகரிக்க வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### தமிழ்நாடு நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர்
# டாக்டர் எஸ்.ஜே.கயஸ் மறைவு!
## கழகத் தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, பிப். 14 –

தமிழ்நாடு நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ்.ஜே.கயஸ் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்து அன்னாரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து கழகத் தலைவர் , முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு :

தமிழ்நாடு நாட்டுப் படகு மீனவர் சங்கத் தலைவர் டாக்டர் எஸ்.ஜே. கயஸ் அவர்கள் (11.2.2026 புதன்கிழமை) அன்று மாலை இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து வருந்துகிறேன்.

அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் நாட்டுப் படகு மீனவர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர் , முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்காவின் வரி விதிப்பு காரணமாக
# இந்தியா - ஈரான் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதா?
## மக்களவையில் — டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப். 14 -

அமெரிக்கா வரிவிதிப்பு காரணமாக இந்தியா ஈரான் வர்த்தகம் பாதிக்குமா? என்றும் சபாஹர் துறை முகத்தில் இந்தியாவின் பங்கு குறித்தும் மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

இந்தியாவும் ஈரானும் குறிப்பிடத்தக்க வர்த்தக உறவைப் பகிர்ந்து கொள்கின்றனவா? 2025-26 நிதியாண்டில் இருதரப்பு வர்த்தகம் $2 பில்லியனை எட்டியுள்ளதா, முக்கிய ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் மற்றும் சாபஹர் துறைமுகம் மற்றும் INSTC போன்ற மூலோபாயத் திட்டங்களால் இயக்கப்படுகிறதா?

இந்தியா சபாஹர் துறை முகத்தில் $500 மில்லியன் முதலீடு செய்திருக்கிறதா? சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து வழித்தடத்தை சார்ந்து ஈரான் வழியாக ரஷ்யா மற்றும் ஐரோப்பாவுடன் இந்தியாவை இணைக்கிறதா? பாரம்பரிய கடல்வழிப் பாதைகளுடன் ஒப்பிடும்போது போக்குவரத்து நேரங்கள் மற்றும் செலவுகளைக் குறைக்கிறது மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25% வரி விதிப்பது ஈரானுடனான இந்தியாவின் வர்த்தகச் சமன்பாட்டை மோசமாகப் பாதிக்குமா?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

பதில் : அதற்கு ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் ஜிதின் பிரசாதா எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

நடப்பு நிதியாண்டில் (ஏப்ரல்டிசம்பர், 2025), ஈரானுடனான இந்தியாவின் மொத்த வர்த்தக வர்த்தகம் USD 1,145.29 மில்லியனாக இருந்தது, இதில் USD 883.10 மில்லியன் ஏற்றுமதியும் 262.19 மில்லியன் டாலர் இறக்குமதியும் அடங்கும். இந்தியாவின் வர்த்தகம் பெரும்பாலும் மனிதாபிமான இயல்புடையது, விவசாய பொரு ட்கள் மற்றும் மருந்துகளை உள்ளடக்கியது. ஏப்ரல்நவம்பர் 2025 காலப்பகுதியில், உருப்படி வாரியாக மற்றும் மதிப்பு வாரியாக, ஈரானுடனான இந்தியாவின் சரக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி விவரங்களை பின்வரும்



இணையத்தில் அணுகலாம்:

https://tradestat.commerce.gov.in/meidb/country_wise_all_commodities_export

https://tradestat.commerce.gov.in/meidb/country_wise_all_commodities_import

ஆப்கானிஸ்தானின் புனரமைப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், மத்திய ஆசியாவுட னான வர்த்தகம் மற்றும் பொருளாதார தொடர்புகளை மேம்படுத்துவதற்காகவும் ஆப்கானிஸ்தானுக்கு மிகவும் தேவையான இணைப்பை வழங்குவதற்காக சபாஹர் துறைமுக திட்டம் கருத்தாக்கப்பட்டது. இந்தியா போர்ட்ஸ் குளோபல் லிமிடெட் (ஐபிஜிஎல்) என்ற இந்திய நிறுவனமானது, அதன் முழுச் சொந்தமான துணை நிறுவனமான இந்தியா போர்ட்ஸ் குளோபல் சபஹர் ஃப்ரீ சோன் (ஐபிஜிசிஎஃப்இசட்) மூலம் 2018 ஆம் ஆண்டு முதல் துறை முகத்தை இயக்கி வருகிறது. 13 மே 2024 அன்று, ஐபிஜிஎல் போர்ட்ஸ் அண்ட் மரைடைம் ஆர்கனைசேஷன் ஆஃப் தி இஸ்லாமிக் டெர்மினிட் ஆஃப் தி இஸ்லாமிக் டெர்மினிட் ஆஃப் தி இரான் போர்ட்ஸ் அன்ட் மரைடைம் ஆர்கனைசேஷன் ஆஃப் தி இஸ்லாமிக் ரிபப்ளிக் ஆஃப் தி போர்ட்ஸ் அன்ட் மேரிடைம் ஆர்கனைசேஷன் உடன் கையொப்பமிட்டது. சபஹர் துறைமுகம். ஒப்பந்தத்தின் விதிகளி ன்படி, துறைமுக உபகரணங்களை வாங்குவதற்காக 120 மில்லியன் அமெரிக்க டாலர்களை இந்தியா நிறைவேற்றியு ள்ளது.

ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 25% வரி விதிப்பது ஈரானுடனான இந்தியாவின் வர்த்தக சமன்பாடு பாதிப்பு குறித்து எந்த தகவலும் இல்லை. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

## தர்மபுரி கிழக்கு மாவட்டத்தில்
# “என் ஊர் என் கனவு திட்டம்” கலந்தாய்வுக் கூட்டம்!
## மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. பேச்சு!

தர்மபுரி, பிப். 14-

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அதியன் கூட்டரங்கில் தருமபுரி திமுக கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி மற்றும் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் ஆகியோர் “என் ஊர் என் கனவு திட்டம்” மாவட்ட அளவிலான கலந்தாய்வு கூட்டத்தினை துவக்கி வைத்து பொதுமக்களுடன் கலந்துரையாடி,தருமபுரி மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு துறைகளில் சாதித்த சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை அணிவித்து, கேடயங்களை வழங்கி மரியாதை செய்தனர்.

இந்த கலந்தாய்வு கூட்டத்தில் ஆ.மணி எம்.பி. பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் பொது மக்களின் நலனுக்காக பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டினை முன் மாதிரி மாநிலமாக உயர்த்தி உள்ளார்.”என் ஊர் என் கனவு” என்ற திட்டமானது, 2030-க்குள் தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்தையும் இலக்கு வைத்து, வளர்ச்சிக்கான தொலைநோக்கு அறிக்கையினை தயாரிக்க தமிழ்நாடு அரசின் ஒரு முக்கிய முன்முயற்சி யாகும். மாவட்ட வளர்ச்சிற்காக திட்டமிடுவதற்காக எதிர்கால தொலைநோக்கு பார்வையோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி உள்ளார். இத்திட்டத்தினை செயல் வடிவத்தில் கொண்டு வருவதற்காக பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் கேட்பதற்காகவே இந்த கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.இந்த திட்டம் ஊரின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும்,சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டுள்ளது. தங்கள் சொந்த ஊரில் உள்ள பள்ளிகள், மருத்துவமனைகள்,நூலகங்கள் மற்றும் பொது இடங்களை மேம்படுத்த நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்க இத்திட்டம் வழிவகை செய்யும்.

அனைத்து தரப்பு மக்களின் வாழ்கையிலும் அக்கறை கொண்டுள்ள நமது தமிழ்நாடு முதலமைச்சர் தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிக்கென பல தொலைநோக்கு திட்டங்களை கொடுத்துள்ளார்.உதாரணமாக அரசில் பல துறைகள் இருந்த போதிலும் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து,அதிக நிதி ஒதுக்கி கல்வி துறையை தன் இரு கண்களாக பாவித்து செயல்பட்டதால் கடந்த 2021 ஆண்டில் நாட்டில் தேர்ச்சி விகிதத்தில் 27 வது இடத்தில் இருந்த தருமபுரி மாவட்டம் இன்று 2026 ஆண்டில் 7 வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.அதுமட்டுமல்ல பள்ளியில் இருந்தே அவர்களின் ஆரோக்கியம் மேம்பட காலை சிற்றுண்டி, ஆரோக்கியம் மேம்பட HPV தடுப்பூசி என கல்வியில் சிறந்த நாடாக தமிழ்நாட்டை உருவாக்கியுள்ளார் நமது முதலமைச்சர். மேலும் ஒவ்வொரு ஊருக்கும் முன்னேற்றம் தரும் வகையில் பல நல்ல திட்டங் களை திராவிட மாடல் அரசு செயல்படுத்தி உள்ளது.தொழில்வளர்ச்சி மற்றும் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிடும் வகையில் விரைவில் தருமபுரி மாவட்டத்தில் சிப்காட்டினை நமது முதலமைச்சர் துவக்கி வைக்க உள்ளார்.

இவ்வாறு அவர் பேசினார்.



இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,ஓய்வு பெற்ற ஆட்சியர் அண்ணாமலை,திரைப்பட நடிகர் பென்ஜமின், பாடகர் மூக்குத்தி முருகன்,பயிற்சி துணை ஆட்சியர் செல்வி. சௌமியா குமார், மாநில விவசாய சங்க தலைவர் சின்னசாமி,திமுக மாநில நிர்வாகி சூடப்பட்டி.சுப்ரமணி, மாவட்ட நிர்வாகி சி.கிருஷ்ண குமார், நகர செயலாளர் முல்லை. ரவி,ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன்,திமுக ஐ.டி. விங் அண்ணாமலை,தமிழழகன்,மற்றும் அனைத்து சங்க பிரதிநிதிகள், உற்பத்தியாளர்கள், வியாபாரிகள்,தொண்டு நிறுவன நிர்வாகிகள், வணிகர்கள், துறைசார் வல்லுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள்,சமூக அக்கறை கொண்ட தனிநபர்கள்,தொழிலதிபர்கள், இளைஞர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேலூர் பி. சண்முகம்
### பிப்ரவரி 14 (2006)



வேலூர் மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.

தமது சொந்த ஊரான அகரம்சேரியில் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“அடக்குமுறைகள் ஏற்றவர் – கழகம் காத்தவர் – கண்ணியமானவர் – கட்டுப்பாடு மிக்கவர் – குறிப்பாக கூறவேண்டுமாயின் மென்மையானவர் – மேன்மையானவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பழக்கடை கி. ஜெயராமன்
### பிப்ரவரி 14 (1985)



சென்னை, தியாகராய நகர் பகுதிக் கழகச் செயலாளராக தொடர்ந்து நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

நெருக்கடி நிலை காலத்தில் ஓராண்டு காலம் மிசா கைதியாக சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர். சிறைப்பறவை என்றும் அஞ்சாநெஞ்சன் என்றும் தலைவரால் பாராட்டப்பட்டவர்.

“ஒரு தொண்டனுடைய படத்தை நான் திறந்து வைத்ததாக கருதவில்லை. ஒரு தலைவனுடைய படத்தை ஒரு தொண்டன் திறந்து வைத்திருக்கிறேன் என்று கருதிக் கொள்ள வேண்டும்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.